**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.253/2020</u>** **தேதி.05.08.2025**

**இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு .............. வா.சா.1 ..................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு 04.08.2025 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமாறன் | இனம் | ஆண் |
| த/பெ. | கண்ணன் | ஊர்/வட்டம் | கத்தாரிக்குப்பம்/வாலாஜா |
| வயது | 57/2025 | தொழில் | கூலி வேலை |

துவக்க நேரம் 04.40 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**1. முனுசாமி மலேசியாவிலேயே வாழ்ந்து அங்கேயே இறந்துவிட்டார் என்றால் நிரந்தரமாகவே வசித்து வந்தார். அவ்வப்பொழுது இந்தியாவிற்கு வந்து செல்வார். வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்துகொண்டதாக சொல்லும்நிலையில் அதற்கான குறிப்பாணை ஏதேனும் எழுதிவைத்துள்ளோமா என்றால் இல்லை. குறிப்பாணை ஏன் எழுதிக்கொள்ளவில்லை என்பதற்கு ஏதேனும் காரணம் சொல்லமுடியுமா என்றால் அந்தகாலத்தில் ஏற்படுத்திக்கொண்டார்கள்.**

**2. பாகப்பரிவினைக்காக குறிப்பாணை எழுதப்பட்டிருந்தால் எனது தகப்பனாருக்கு எந்த சொத்துக்கள், முனுசாமிக்கு எந்த சொத்துக்கள் என்பதை குறிப்பாக அறியமுடியும் என்றால் அப்படியல்ல மலேசியாவில் உள்ள சொத்துககள் முனுசாமிக்கும், இந்தியாவில் உள்ள சொத்துக்கள் எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் ஆகும்.**

3. மலேசியாவில் வாங்கிய சொத்திற்கு ஆதாரமாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தகப்பனாரும், முனுசாமியும் மலேசியாவில் எந்த சொத்தையும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. வாய்மொழியாக பாகம் பிரித்தது பொய் என்றாலும் அதுபோன்று எந்த பாகமும் பிரியவில்லை என்றாலும், சரியல்ல.

4. கடந்த 22.03.1960 தேதியிட்ட கிரய பத்திரமான வா.த.சா.ஆ.1 ல் உள்ள சொத்துக்ளில் உள்ள நாற்புற எல்லைகளை சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியும், வடக்கில் ராமசாமி, வரதவுடையார் வகையராக்கலும், கிழக்கில் கண்ணன் நிலமும், தெற்கில் நாகம்மாள், வரதவுடையார் ஆகியோர் நிலங்களும், மேற்கில் தட்சமானியம் மற்றும் நாகம்மாள் ஆகியோர்களின் நிலங்களும் உள்ளன.

5. நான் இந்த வழக்கை மேற்சொன்ன 4 எல்லைகளுக்கு தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் சொன்ன 4 எல்லை என்பது அப்பொழுது உள்ள எல்லைகள் ஆகும். தற்பொழுது வேறு எல்லைகள் உள்ளன. வா.த.சா.ஆ.1 ன்படி எவ்வளவு கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் ஏக்கர் 0.55 1/2 நிலம் கிரயம் பெறப்பட்டுள்ளது.

6. பாஸ்கர்ராவ் மற்றும் தாமோதர் ராவ் ஆகியோர் உடன்பிறந்த சகோததர் என்றால் சரியல்ல. மேற்கண்ட இருவரையும் எனக்கு தெரியும் என்றாலும், மேற்கண்ட நபர்களின் தாமோதர் ராவ் 1ம் பிரதிவாதியின் தந்தை என்றாலும், இந்த விவரங்கள் என்றாலும், தெரிந்துகொண்டே வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. வா.த.சா.ஆ.1 ன்படி முனுசாமி என்பவர் மொத்தமுள்ள ஏக்கர் 1.11 நிலத்தில் ஏக்கர் 0.55 1/2 நிலம் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1 ன்படி பாஸ்கர் ராவ் என்பவரின் பாகத்தைதான் முனுசாமி

கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மீதி உள்ள ஏக்கர் 0.55 1/2 நிலம் 1ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் எனக்கு தெரியாது.

8. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில், பாஸ்கர் ராவ், தாமோதர் ராவ் ஆகியோர்களை தெரியும் என்று ஒப்புக்கொண்டு,. தற்பொழுது வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. பாஸ்கர் ராவ், தாமோதர் ராவ் ஆகிய இருவர் பெயரிலும் பட்டா எண்.290 பட்டா பெற்றுள்ளதாக நான் எனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

9. மேற்படி பட்டாவை ரத்து செய்வதற்கு நான் ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளேனா என்றால் அதை ரத்து செய்ய முயற்சிசெய்தேன். பிரதிவாதிகள் அதிகமான பிரச்சனை செய்தார்கள் அதனால் வழக்கு தாக்கல் செய்துவிட்டேன்.

10. 1960ம் தேதியிட்ட ஆவணத்தின்படி மீதம் உள்ள 0.55 1/2 பாகத்தை தாமோதர் ராவ் கடந்த 28.04.2015 அன்று 1ம் பிரதிவாதி தனது மகனுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்துள்ளார் என்றால் எழுதிவைத்திருக்கலாம் ஆனால் அந்த இடத்தில் நிலம் இல்லை.

11. 1ம் பிரதிவாதி அவரது மகன் பெயரில் ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாமோதர் ராவ் பெயரில் தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் பிரச்சனைக்கு பிறகு தெரிந்துகொண்டேன். தாமோதர் ராவ் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்ய நான் ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன்.

12. 1ம் பிரதிவாதி வேதாத்திரி பெயரில் தனிப்பட்டா எண்.1115 வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதை கண்டுபிடித்துதான் ரத்து செய்ய இந்த வழக்கை தாக்கல் செய்தேன். இந்த வழக்கை நான் காலம் கடந்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண்.114/1 ஆகும். சர்வே எண்.114/1 குறித்து ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.த.சா.ஆ.1ற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

14. வா.த.சா.ஆ.1ல் கண்டுள்ள முனுசாமி என்ற பெயருக்கும் நான் சொல்லும் முனுசாமி என்பவருக்கும், எந்தவித தொடர்பும் இல்லை என்றாலும், ஆவணத்தில் உள்ள முனுசாமி என்பவர் வேறு நபர் என்றாலும், நான் சொல்லும் முனுசாமி என்பவர் வேறு நபர் என்றாலும் சரியல்ல. முனுசாமி என்பவர் எனது பெரியப்பா.

15. வேர்கடலை பயிர் வைத்துள்ளதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இனிமேல்தான் போடனும். என் தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.9 உயில் ஆவணத்தை எனது தகப்பனார் இந்த வழக்கை தாக்கல் செய்தபின்னிட்டு எழுதிவைத்தார் என்றால் சரிதான்.

16. நான் தாக்கல் செய்துள்ள உயில் ஆவணத்தில் 4 எல்லைகள் ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள உயில் ஆவணம் வழக்கிற்காக தாயர் செய்யப்பட்டது என்றாலும், உயில் சொத்திற்கும், வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

17. தாவா சொத்தில் நான் அத்துமீறி நுழைந்ததாக 1ம் பிரதிவாதி என் மீது கடந்த 20.10.2020ம் தேதியில் சிப்காட் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் நான் அத்துமீறி நுழையவில்லை, இருதரப்பிலும் புகார் கொடுக்கப்பட்டது. அவர்கள்தான் என்னிடத்தில் தகராறு செய்தார்கள்.

18. நான் அடிக்கடி 1ம் பிரதிவாதியிடம் தகராறு செய்ததால், 1ம் பிரதிவாதி எனக்கு எதிராக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் எனக்கு எதிராக W.P.No.14046/2020 வழக்கு தாக்கல் செய்து அந்த உத்தரவின் அடிப்படையில், வாலாஜா சர்வேயர் வழக்கு சொத்திடம் வந்து அளவீடு செய்தார் என்றாலும், இந்த விவரம் எனக்கு தெரியும் என்றாலும், சரியல்ல. அந்த வழக்கில் நான் தரப்பினர் இல்லை. அளக்க வந்தது உண்மை தடுத்துவிட்டோம். அளக்கவரும்போதுதான் 1ம் பிரதிவாதி உத்தரவு பெற்ற விவரம் எனக்கு தெரியும்.

19. உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் வாலாஜா சர்வேயர் வந்து வழக்கு சொத்தை பார்வையிட்டு, அளந்து அது தொடர்பாக வரைபடம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சர்வேயர் அளக்கவே இல்லை. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 1ம் பிரதிவாதி கடந்த 21.09.2020 அன்று பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டுதான் பதில் அறிவிப்பு கொடுத்தார்.

20. வா.த.சா.ஆ.1ன் அசல் ஆவணம் தொலைந்துவிட்டதாக நான் சொல்லும்நிலையில் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. வா.த.சா.ஆ. 10, 11 மற்றும் 12 ஆகியவவற்றின் அசல்

ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அது 3ம் தரப்பினர் ஆவணம் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை.

21 வா.த.சா.ஆ.10,11 மற்றும் 12 ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து உயில் எழுதிவைக்க எனது தந்தைக்கு எந்தவித அதிகாரம், உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் தந்தை எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்று நான் காலம் கடந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

22. வழக்கு சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், எவ்வித பரிகாரமும் கோர முடியாது என்றாலும் அதனால் இந்த வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை :- இல்லை

முடிவு நேரம் 05.40 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.